செய்தி வெளியீடு எண்: 507 நாள்: (04.08.2011)

# எளிமையான முறையில் பட்டா வழங்குதல், முதியோர் உதவித்தொகை வழங்குதல் மற்றும் பள்ளி மாணவர்களுக்கான சான்றிதழ்களை பள்ளியிலேயே வழங்குதல் குறித்து மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் ஆய்வுக்கூட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், நடைமுறையில் பின்பற்றப்பட்டு வரும் வழிமுறைகளை எளிமையாக்கி, பட்டா மாறுதல் ஆணை வழங்குதல், முதியோருக்கான ஒய்வூதியத்தொகையினை விரைந்து வழங்குதல் மற்றும் பள்ளியில் பயின்று வரும் மாணவ மாணவியர்கள் கல்லூரிகளின் விரைந்து சேர்ந்திட ஏதுவாக, அவர்களுக்குத் தேவையான சாதிச்சான்றிதழ், இருப்பிட சான்றிதழ், வருமான சான்றிதழ்கள் உள்ளிட்டவைகளை தாம் பயிலும் பள்ளிகளிலேயே தலைமை ஆசிரியர்களிடம் விண்ணப்பித்து அவற்றை பள்ளிகள் மூலமே பெற்றிட ஆவன செய்திட வேண்டும் என்று அண்மையில் அறிவுறுத்தியிருந்தார்கள்.

இப்பணிகளை விரைந்து செயல்படுத்திடும் பொருட்டு, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி அவர்கள் தலைமையில் கடந்த (22.07.2011) அன்று தலைமைச் செயலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. முதற்கட்டமாக நடைபெற்ற இக்கூட்டத்தில் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் 36 வருவாய் கோட்டாட்சியர்கள் கலந்து கொண்டனர்.

இரண்டாம் கட்டமாக மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், இன்று (04.08.2011) தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் 40 வருவாய்க் கோட்டாட்சியர்கள் கலந்து கொண்டனர். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுறுத்தலை விரைந்து செயல்படுத்திட, களப்பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றிடுவதோடு, ஏழை எளிய மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு செயல்படுத்தப்படும் இது போன்ற நல்ல திட்டங்களின் பயன்களை உரிய காலத்தில் அனைவரும் பெற்றிடும் வகையில், நம்மை அர்ப்பணித்து பணியாற்றிட வேண்டும். பட்டா மாறுதல் உத்தரவுகள் வழங்கப்படுவதில் எவ்வித சுணக்கமும் இல்லாமல் பாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரைவு பட்டா மாறுதல் திட்டத்தினை கடந்த 18.7.2011 அன்று தொடங்கி வைத்தார்கள். இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை அனைவரும் உணர்ந்து செயல்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தியதை மனதில் கொண்டு வருவாய் கோட்டாட்சியர்கள் செயல்படவேண்டும்.

குறிப்பாக முதியோர் உதவித்தொகை குறித்து பெறப்படும் மனுக்களை உடனடியாக பரிசீலித்து தகுதியானவர்களுக்கு உடனடியாக உரிய ஆணையினையும், 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பயின்றிடும் மாணவ மாணவியர்கள் தங்களின் கல்லூரிப் படிப்பில் விரைந்து சேர்ந்திடத் தேவையான சாதிச்சான்றிதழ், வருமான சான்றிதழ்,

**இருப்பிடச் சான்றிதழ் ஆகியவற்றை அந்தந்த பள்ளிகளின் மூலமாக பெற்றிட ஆவன செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் அலுவலர்களை கேட்டுக் கொண்டார். மேலும் வருவாய் கோட்டாட்சியர்களின் இதர பணிகள் குறித்தும் ஆய்வு செய்தார்.**

**இக்கூட்டத்தில் வருவாய்த்துறை முதன்மைச் செயலர் திரு. ஆர். இராஜகோபால் இ.ஆ.ப., முதன்மைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் திரு. கு. ஞானதேசிகன் இ.ஆ.ப., முதன்மைச் செயலர் / நில நிருவாக ஆணையர் திரு. ஸ்வரன் சிங் இ.ஆ.ப., திரு ஏ. சுகுமாரன், இ.ஆ.ப., நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையர் உள்ளிட்ட உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.**

வெளியீடு: –

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.